# சைவம்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
தமிழ்நாடு

சைவம் என்பது சிவசம்பந்தமுடையது. தில (எள்) சம்பந்தமுடையது தைலம், சிலா சம்பந்தமுடையது சைலம்; அதுபோல் சிவ சம்பந்தமுடையது சைவம். எனவே சிவம் என்று உளதோ அன்றே சைவம் உளது. ஆகவே தொன்மையும் நன்மையும் படைத்தது. ஏனைய சமயங்கள் ஒவ்வொரு குருமார்களால் தோன்றியவை; அதனால் அந்தச் சமயங்கள் அந்தந்தக் குருமார்களின் பெயர்களாலேயே அமைந்துள்ளன.

சைவ சமயம் எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு தாயகமாக விளங்குவது. எந்தச் சமயத்தையும் புறக்கணிக்காது தழுவி நிற்கும் சமரசமுடையது; ஒரு தாய் தன் குழந்தைகளைத் தழுவுவதுபோல் என அறிக.

சிவம் என்பது அன்பின் வடிவமாகும்.

''அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே'' என்பார் திருமூலர்.

எனவே சைவ சமயம் என்பது அன்புச் சமயமாகும்.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே''
என்பதுதான் சைவ சமயத்தின் உயிர் நாடி.

எல்லா உயிர்களும் ஈசன் தங்கியிருக்கும் கோயில்களே ஆகும். எனவே ஈசன்மேல் பட்ட அடி எல்லா உயிர்களின் மேலும் பட்டது என்று மகாபாரதமும், திருவிளையாடற் புராணமும் கூறுகின்றன. விஜயன் வில்லால் அடித்த அடி அணு முதல் அகிலாண்டம்வரை, புழு முதல் உருத்திரன் வரை, எல்லார் மீதும் எல்லாவற்றின் மீதும் பட்டது. பாண்டியன் வையையாற்றின் கரையில் வந்திக்கு ஆளாக வந்த பரமனைப் பிரம்பால் அடித்த பொழுது, அவ்வண்ணமே எங்கும் அவ்வடி பட்டது. இதனால் இறைவன் எல்லா உயிர்களிலும் உயிர்க்குயிராய் நிறைந்திருக்கின்றான் என்பதனை அறிக.

சைவ சமயத்தைக் கடைப்பிடிப்போர்கள் எனது யான் என்ற இரண்டையும் தள்ளவேண்டும்; எவரும் யாவும் யான் எனக் கொள்ள வேண்டும். இதுதான் எல்லா நூல்களின் முடிந்த முடிவு. ஆன்றோரின் அனுபவ உண்மை. இந்த அநுபவம் வாய்க்கப் பெறாதவர் வானுயர் கோலம் கொள்ளினும் தேனெனும் கலைகள் கற்பினும் பயனில்லை. இதனைப் பரம அநுபவ ஞானியாகிய அருணகிரிநாதர் இரண்டுவரிகளில் உபதேசிக்கின்றனர்.

''எனதி யானும் வேறாக எவரும் யாதும் யானாகும்
இதய பாவனா தீதம் அருள் வாயே''
-திருப்புகழ்
''யான் எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகு புகும்''

எனத் திருவள்ளுவரும் திருவாய் மலர்ந்தருளுகின்றார். எனவே சைவ சமயிகள், எனது யான் என்ற புறப்பற்றையும் அகப்பற்றையும் அறவே களைந்து, இறைவனைத் தன்னுள் கண்டு, எல்லாப் பொருள்களிலும் அப்பரமனைக் கண்டு, அது அதுவாய் ஒன்றுபட்டு நின்று அவ் விறை பணியில் வழுவாது நின்று, மும்மலங்களும் நீங்க இறைவன் செம்மலர் நிழலில் ஓங்கிப் பேரானந்தப் பெருவாழ்வில் திளைத்தல் வேண்டும்.

''அவனே தானே யாகிய வந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே''
என்று சிவஞான போதம் 10-வது சூத்திரம் உபதேசிக்கின்றது.

ஆகவே, சைவ சமயம் அருமையும் எளிமையும் உடையது. அதில் உள்ள உண்மைகள் எல்லாரும் ஒப்ப முடிந்தவை. முடிந்த முடிவு சைவ சித்தாந்தம் ஆகும்.

இப் புனிதமான மனிதப் பிறப்பெடுத்த நாம் அனைவரும் சைவ சமய நெறி நின்று ஈடேறும் வண்ணம், இச்சமய உண்மைகளை உபதேசித்த குரவர்கள் நால்வர்கள். ''தாவில் சராசரமெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் புரிந்தார்'' என்ற திருவாக்கின்படி சம்பந்தர் முதலிய நால்வர்கள் சிவம் பெருக்க வந்தவர்கள். அவர்கள் பாடித்தந்த தேவார திருவாசங்களும், ஏனைய ஆன்றோர்கள் பாடிய அருள் நூல்களும், ஆக 12 திருமுறைகள் தோத்திரங்கள். மெய்கண்டார் முதலியோர்கள் நம் பொருட்டு உணர்த்தியருளிய சாத்திரங்கள் பதினான்கு. தோத்திரங்கள் 12; சாத்திரங்கள் 14. சைவ சமயிகள் இவற்றைப் பெற்றுப் பூசித்து வாசித்துப் பெருநலம் பெறவேண்டும்.

எங்கும் சிவத்தைக் காணவேண்டும். தவத்தைச் செய்ய வேண்டும். எம்மதத்தையும் பழிக்கக் கூடாது.

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்

கேற்றதாகும்''
என்பது அப்பர் திருவாக்கு.

எச்சமயத்தினர் எத்தேவரை வணங்கினாலும் அத்தேவராக நின்று அருள்புரியும் முழுமுதற் பரம்பொருள் சிவமேயாகும்.

''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்''
என்பது சிவஞான சித்தியார்.

ஆதலால், அமைதியுள்ள மனதுடன் சைவ சமயிகள் வாழவேண்டும். சைவத்திற்கே உரிய பண்பு பணிவு. ''தாழ் வெனும் தன்மையோடும் சைவமாம் சமயஞ் சாரும் ஊழ் பெறல் அரிது'' என்கிறார் அருணந்திதேவர்.

சிவமே பொருள், அவரைச் சேரும் நெறி அன்பே; நமக்குப் பகை பிறவியே. அருட் கண்ணாலே சிவத்தைக் கண்டுகளிக்க வேண்டும்.

நன்றி: வாரியார் விருந்து




ஸ்ரீ தட்சிணா மூர்த்தியின்
சின் முத்திரை

1. பெருவிரல்: பதி
2. ஆள்காட்டி விரல்: ஆன்மா
3. நடுவிரல்: ஆணவம்
4. மோதிரவிரல்: கன்மம்
5. சிறுவிரல்: மாயை

தத்துவம்

ஆணவம் கன்மம் மாயை ஆகியவற்றுடன் சேர்ந்துள்ள ஆன்மாவை (ஆள் காட்டி விரல்) திருவருளானது பணியவைத்து பதியாகிய இறைவனைச் (பெருவிரல்) சேரவைப்பது. ஆன்மா இறைவனின் பாதம் பணிதல் வேண்டும் இதுவே மோட்சம் என விளக்கும் முத்திரை.